செய்தி வெளியீடு எண்: 379 நாள்:04.07.2021

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

**மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் சென்னை – சைதாப்பேட்டை சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வது தொடர்பாக திட்டப்பகுதி மக்கள் மற்றும் சங்க நிர்வாகிகளிடம் கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெற்றது.**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு தற்போது சிதிலமடைந்த நிலையிலுள்ள குடியிருப்புகளை அகற்றி மறுகட்டுமானம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கோட்டூர்புரம் மற்றும் சித்ரா நகர் அனைத்து மக்கள் நல்வாழ்வு சங்கம், பல்லடுக்கு குடியிருப்புகளை கட்டுவதற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்காத நிலையில், இத்திட்டத்தினை செயலாக்குவது தொடர்பாக **மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன்** அவர்களுடன் இணைந்து இன்று (04.07.2021) திட்டப்பகுதி மக்கள் மற்றும் சங்க நிர்வாகிகளிடம் கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களால் 1970–74 வரையிலான காலத்தில் 82 தொகுப்புகளில் மொத்தம் 1656 அடுக்குமாடி குடியிருப்புகள் தரைத்தளம் மற்றும் இரண்டு அடுக்குகளில் 213 சதுர அடியில் கட்டப்பட்டன.

2009 முதல் 2015 வரையிலான காலத்தில் 8 தொகுப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் திட்டத்தின் கீழ் 180 அடுக்குமாடி குடியிருப்புகள் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குகளில் 319 மற்றும் 385 சதுர அடியில் குடியிருப்புகள் கட்டப்பட்டன.

மீதமுள்ள 74 தொகுப்புகளில் உள்ள 1476 சிதலமடைந்த குடியிருப்புகளை அகற்றி, வாகன நிறுத்த வசதி கொண்ட தாங்கு தளத்துடன் கூடிய ஐந்து அடுக்குளில் ஒவ்வொரு குடியிருப்பும் 420 சதுர அடி பரப்பளவில் வரவேற்பறை, உறங்கும் அறை, சமையலறை தனித்தனியே குளியலறை மற்றும் கழிவறை, மின்தூக்கி (lift), ஜெனரேட்டர் உள்ளடக்கிய நவீன வசதிகளுடன் கூடிய 20 தொகுப்புகளில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித்தர மாண்புமிகு ஊரகத்தொழிற் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவி மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட இருப்பதால், குடியிருப்புதாரர்களின் முழு ஒத்துழைப்புடன் பழைய குடியிருப்புகளை மூன்று மாத காலத்திற்குள் காலி செய்யும் பட்சத்தில், அக்குடியிருப்புகளை அகற்றிவிட்டு 18 மாத காலத்திற்குள் புதிய குடியிருப்புகள் கட்டி தரப்படும் என்றும் கோட்டூர்புரம் மக்களிடம் கருத்துக்கேட்பு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.மா.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், தலைமைப்பொறியாளர் திரு.இராம.சேதுபதி அவர்கள், கண்காணிப்பு பொறியாளர் திரு.சு.சுந்தர்ராஜன், நிர்வாகப்பொறியாளர் திரு.கு.சேகர் உள்ளிட்ட வாரிய பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

தலைமைப் பொறியாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**